வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.2987/ஆ2/2023 நாள். .07.2023

பொருள்: பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – சமூக நலன்மற்றும் மகளிர் உரிமைத்துறை –புரட்சி தலைவர் எம்,ஜி,ஆர், சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையினை தினந்தோறும் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் குறுஞ்செய்தி வாயிலாக பதிவிடுதல் – தொடர்பாக

பார்வை: 1.வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.833/2023 /பிஜி3 நாள். .07.2023.

-----

பார்வையில் காணும் கடிதத்திற்கிணங்க புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தில் சத்துணவு உண்ணும் பயனாளிகளின் எண்ணிக்கையை அறிந்து கொள்ளவும், கண்காணிக்கவும் BSNL ( Empanel) நிறுவனம் மூலம் சத்துணவு உண்ணும் மாணவ /மாணவியர்களின் எண்ணிக்கையைஉள்ளீடு செய்வதற்கு சத்துணவுத் திட்ட கண்காணிப்பு செயலி( Nutritious Meal Progamme Monitoring Application) உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சத்துணவு உண்ணும் மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கையை தினந்தோறும் உள்ளீடு செய்வது குறைந்த அளவில் பெறப்படுவதாகவும், தகவல் முழுமையாக உள்ளீடு பெறப்படாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே சத்துணவு திட்டசெயல்பாடு மற்றும் சத்துணவு உண்ணும் மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கையை அவ்வப்போது உள்ளீடு செய்து இத்திட்டம் சிறப்புடன் செயல்பட அனைத்து பள்ளித் தலைமை ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியரால் நியமிக்கப்படும் மற்றொரு பொறுப்பு ஆசிரியர் வாயிலாக சத்துணவு உண்ணும் பயனாளிகளின் எண்ணிக்கையை சத்துணவு திட்ட கண்காணிப்பு செயலியில் ( Nutritious Meal Programme Monitoring Application) தினந்தோறும் காலை 11.00 மணிக்குள் உள்ளீடு செய்து அதனை உறுதி செய்திடுமாறு சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியருக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடியாக இச்செய்தியை கண்காணிப்பதால் இதல் தனிக்கவனம் செலுத்தி எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் செயல்படுமாறு தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

31/7/23

முதன்மைக் கல்வி அலுவலர்.
வேலூர்.

31/7/23

பெறுநர்
1.சார்ந்த தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.
2.மாவட்டக் கல்வி அலுவலர்,(தொடக்க கல்வி) வேலூர்.